DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.209/2023 | Deposition of Witness for : PW3 |
| Name : ஆண்ட்ரூஸ் | Father/Husband Name : சூசைமுருகன் |
| Age : 33 | Village : கோவில் குடியிருப்பு |
| Taluk : ஏரல் | Calling : முள்வேலி அமைக்கும் பணி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 July 2026.

Accused A1 present. A2 died. A3 absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–**

1. நான் ஒப்பந்த அடைப்படையில் முள்வேலி அமைக்கும் பணியில் வேலையாட்களை கூட்டி செல்வேன் என்றால் சரிதான். சேதமதிப்பு சான்றிதழ் அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சேதமதிப்பு சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தேதியில் என்னிடம் சான்றிதழ் வாங்கினார் என்றால் 01.04.2023 காலை 08.00 மணியிலிருந்து 09.00 மணிக்குள் வாங்கினார்கள். நான் என்னுடைய அன்றாட பணிக்கு எத்தனை மணிக்கு செல்வேன் என்றால் காலை 09.30 மணிலிருந்து 10.00 மணிக்குள் வீட்டிலிருந்து கிளம்பி செல்வேன் மாலை 04.00 மணியிலிருந்து 05.00 மணிக்குள் பணி முடியும். நாசரேத் காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் ஒரு போலீசார் வந்தார் ஆனால் அவர் காவல் உதவி ஆய்வாளரா என்றால் எனக்கு தெரியாது. நான் எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் ஒரே ஒரு பேப்பரில் தான் கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணத்தில் ஏதாவது எழுதியிருந்ததா என்றால் எழுதியிருந்தது. என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் காளிதாஸ் என்ற பெயரியவரும் கையொப்பம் செய்தார். தற்போது காளிதாஸ் இருக்கிறாரா என்றால் அவர் ஊரில் தான் வசித்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 ஆவணத்தில் Jesus fencing Works என லெட்டர் பேடில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ஆவணம் காவல் உதவி ஆய்வாளர் அவர் வந்து விசாரிக்கும் போது நான் கொடுக்கவில்லை, அ.சா.1 என்னிடம் கேட்டார் அவரிடம் தான் நான் இதை கொடுத்தேன். 01.04.2023 அன்று போலீசார் என்னிடம் வந்து என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று அங்கே உடைந்து கிடந்த கற்கள், வேலி வலை ஆகியவற்றை காண்பித்து நாங்கள் இதை பார்வையிட்டிருக்கிறோம், அதற்கு நீங்கள் சாட்சி என்று கூறினார்கள் நான் அதில் கையொப்பம் செய்தேன். உண்மையிலேயே நான் கொடுத்த சான்றிதழில் விபரத்தை வேறு ஒரு நபரிடம் கேட்டு அதன் அடிப்படையில் தான் சான்றிதழ் கொடுத்தேன் என்றால் சரிதான். அ.சா.1 ன்

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:27:45 +0530

கணவர் ஜெயகோபால் எனக்கு என்ன உறவுமுறை என்றால் தூரத்து உறவினர் ஆவார், என்னுடைய சித்தப்பா ஆவார். எங்கள் ஊரில் சுமார் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 40 வீடுகள் இருக்கும். மேற்படி 40 வீடுகளில் உள்ளடங்கிய பகுதிதான் இந்த வழக்கு சம்பவம் நடந்த பகுதி என்றால் சரிதான். நான் போலீசாரும், அ.சா.1 ம் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யான ஒரு சான்றிதழை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் உள்ள கையெழுத்தை அ.சா.1 ன் உறவினர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. (3 வது எதிரி தனது தரப்பு குறுக்கு விசாரணையாக 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்)

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:27:51 +0530

Judicial Magistrate, Sathankulam.